(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சுற்றுலாவை வளர்க்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மகாபலிபுரம் உலக அளவில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்கி வருவதால் சுற்றுலாப் பயணிகளை நாம் கவர்வதற்காக அரசின் மூலமாகவோ அல்லது தனியார் மூலமாகவோ இதுபோன்ற வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தால் சுற்றுலா மேலும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்குமென்ற காரணத்தால், அரசாங்கம் அப்படி ஏதாவது நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக இப்படிப்பட்ட விமானம், ஹெலிகாப்டர் போன்றவைகளை ஒட்டுவதற்கு இயலாது. அப்படிப்பட்ட திட்டம் சுற்றுலா வளர்ச்சி கழகத்திலே இல்லை. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சென்னையிலிருந்து பம்பாய்வரையில் தனியாருடைய விமானம் ஓடத் தொடங்கியுள்ளது. அதைப் போல எதிர்காலத்திலே மகாபலிபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களுக்கு ஹெலிகாப்டர் விமான சர்வீஸ் நடத்துவதற்கும் அப்படிப்பட்ட தனியார்கள் முன்வருவார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

மருதமலை கோவிலைப் புதுப்பித்தல்.

*9960-திரு. யூ.கே.வெள்ளிங்கிரி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியில் அமைந்துள்ள மருதமலை கோவிலைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

1991 சனவரி 22]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் தொடர்பாக வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு ஆகியவைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் புதுப்பிக்கும் பணி தொடங்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வரைப்படங்கள் தயார் செய்யப்பட்டும் நீண்டகால மாக காலதாமதமாகி வருவதாக அந்தப் பகுதியில் இருக்கிற பெரியவர்கள் எல்லாம் என்னிடம் வந்து சொன்னார்கள். ஆகவே, விரைவில் அந்தப் பணியை செய்யவேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வரைப்படங்கள் இந்த முறையாவது சரிசெய்யப்பட்டு பணியை முடிக்கவேண்டும். எத்தனை ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் நிறைவேற்றப் படும் என்பதையும் எந்தக் கால அளவிற்குள் அது முடிக்கப்படும் என்பதையும் அந்தப் பகுதி மக்கள் என் மூலமாக அறிய விரும்புகிறார்கள். ஆகவே, எவ்வளவு காலத்தில் பணி முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தாமதம் இருப்பதாக எனக்கும் தகவல் வந்தது. இந்தத் திருப்பணியைத் தொடங்க வேண்டுமென்று 1985 ஆம் ஆண்டிலேயே மதிப்பீடு செய்யப் பட்டது. ஆனால் அந்த வேலை எடுக்கப்படவில்லை. இதற்கு ஒரு முக்கியமான காரணம், அங்கே ராஜகோபுரத்தை எங்கே கட்டுவது என்ற ஒரு பிரச்சினை வந்தது. அதற்காக குழி தோண்டிய இடத்தில் பாறையும், மண்ணும் சரிந்த காரணத்தால் அங்கே அதனைக் கட்ட முடியாது என்று முடிவு செய்தார்கள். அந்த இடத்தை இப்போது மூடி இருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. ராஜகோபுரம் நீக்கி, அர்த்த மண்டபம், மகா மண்டபம் போன்ற மற்ற வேலை களுக்கு இன்றைய நிலவரப்படி ஏறத்தாழ ரூ. 33 லட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு மேலே அடுத்த கட்ட மாக ராஜகோபுரத்திற்கு 17 அல்லது 18 லட்சம் ரூபாய் ஆகும். ஆகவே, ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் செலவில் பணி இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளே தொடங்கவிருக்கிறது. முடிவதற்கு இரண்டு ஆண்டுக் காலம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். புதுப்பிக்கப்படும் என்று. அந்த வேலைகளைச் செய்து முடிக்க

திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தத் திருப்பணிக் குழு செயல்படுகின்றதா? அதை அதிகப்படுத்தியிருக்கிறார்களா? அந்தத் திருப்பணிக் குழு இதைக் கண்காணிக்குமா? அல்லது அங்கேயிருக்கக்கூடிய நிர்வாகமே அதை நேரடியாகக் கண்காணித்து அந்த வேலையைச் செய்து முடிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, கடந்த 19, டிசம்பர் 1990-ல் புதிய திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. சுந்தர சுவாமிகள் அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த திருப்பணிக் குழு இப்படிப்பட்ட வேலையை எப்படியோ அங்கே செய்து முடிப்பதற்குத் தவறிவிட்டது. ஆனால் இப் போது அமைக்கப்பட்டு இருக்கிற திருப்பணிக் குழுவில் ஏறத்தாழ 15 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் உள்ள முக்கியமானவர்கள் எல்லாம் அதிலே இருக்கிறார்கள். ஆகவே, கோவில் நிதியிலிருந்தும், அதேபோல் நன்கொடையாளர் களிடமிருந்தும் கிடைக்கக்கூடிய நிதியிலிருந்தும் அந்த வேலை விரைவாக நிறைவேற்றி முடிக்கப்படும்.

ஊராட்சித் தலைவர்கள் மூலமாகக் கட்டப்படும் இலவச வீடுகள்.

* 1593—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சித் தலைவர்கள் மூலமாகக் கட்டப்படும் இலவச வீடுகளைக் கட்ட மறுக்கும் ஊராட்சித் தலைவர்களை மீறி அந்தந்த ஒன்றியப் பொறியாளரே கட்ட அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. **மணி** : துணைத் தலைவர் அவர் களே, ஊராட்சிகளில் தொகுப்பு வீடுகள் கட்டும் பணி ஊராட்சி யிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. தலைவர்கள் அந்தப் பணியை மேற்கொண்டு நடத்துவதற்கு மறுத்தாலோ, அல்லது தரக்குறைவாக அந்தப் பணிகள் இருந்தாலோ, அதைத் திருப்பி மாற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒன்றியத்தின் மூலமாக நடத்துவதற்கு ஆணை பிறப்பிக்கலாம். ஆனால் ஒன்றியப் பொறியாளர், அந்த வேலையை மேற்கொள்ள இயலாது. காரணம், அதை ஆய்வு செய்வதும், அளவு எடுப்பதும் அவருடைய பொறுப்பாக இருக்கிற காரணத்தால், வேறு ஒரு பணியாளர் அந்தப் பொறுப்பை ஏற்று நடத்துவார்.